[1979 பிப்ரவரி 22

இணைப்பு II.

[23ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 132க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் விவசாயப் பேரணி பின்கண்ட ஆறு கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டது :—

(1) தஞ்சை மாவட்டம் பூராவும் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட வேண்டும்.

(2) இந்த ஆண்டுக்கு உள்ள நிலவரி அது சம்பந்தப்பட்ட தண்ணீர் வரி, செஸ், சர்சார்ஜ், பஞ்சாயத்து வரிகள், விவசாய வருமான வரி அனைத்தும் வஜா செய்யப்பட வேண்டும்.

(3) 1977ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் தேதிக்கு முந்திய விவசாயக் கடன்கள் அனைத்தையும் (கூட்டுறவு, அரசுடைமை வங்கிகள் மூலம் கொடுக்கப்பட்டது) ரத்து செய்ய வேண்டும்.

(4) விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 120-ம் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 140-ம் அடிப்படை விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

(5) நெல்லுக்கு உள்ள மாவட்டக் கட்டுப்பாடுகளை நீக்கி விவசாயிகள் தங்கள் நெல்லை தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் கொண்டு போய் விற்பதற்கு உரிமை வழங்கப்பட வேண்டும்.

(6) தமிழக அரசால் நியமிக்கப்பட்ட விவசாய விசாரணைக் குழு தஞ்சை மாவட்டத்துக்கு வருகைதந்து நேரடியாக விசாரணை செய்ய வேண்டும். மற்றும் அக்குழுவில் தஞ்சை மாவட்ட விவசாயக் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரை குழு உறுப்பினராக நியமிக்க வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கோரிக்கை எண். 1:

தமிழகத்தில் எந்தப் பகுதியும் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாக பொது அறிவிப்பு ஏதும் அரசினால் வெளியிடப்படவில்லை.

புயல், வெள்ளம் இவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விளைச்சல் 37 பைசாவுக்கு (பழைய கணக்குபடி 6 அணாவுக்கு) குறைவாக உள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு

1979 பிப்ரவரி 22]

செய்தால், அப்பகுதிகளுக்கு அன்னவாரி சான்றிதழ்கள் வழங்கி நிலவரி முழுவதையும் வஜா செய்ய அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. அதற்கிணங்க தஞ்சை மாவட்ட ஆட்சித தலைவர் மாவட்டத்தில் உள்ள 34 வட்டாரங்களில் 22 வட்டாரங்கள் பாதிக்கப்பட்ட பகுதியாகவும் 8 வட்டாரங்களில் பெரும்பகுதி கிராமங்கள் பாதிக்கப்பட்ட பகுதியாகவும் அறிவித்துள்ளார். புயல் தாக்காத (வெள்ளம் அடிக்காத) நான்கு வட்டாரங்கள் மட்டுமே பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படவில்லை.

கோரிக்கை எண். 2 :

அரசு நிலை ஆணை எண். 533 (வருவாய்) 1978ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ஆம் நாளில் 1387ஆம் பசலியில் தமிழகம் முழுவதிலும் கடந்த வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அன்னவாரி சான்றிதழ்கள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிலவரி, தண்ணீர் வரி, செஸ், சர்ஜார்ஜ், தனி தண்ணீர்வரி, பணப் பயிர் வரி முதலிய வரிகளை வஜாசெய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

கோரிக்கை எண். 3 :

கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்யவோ தவணைக் காலத்தை மாற்றவோ அரசுக்கு அதிகாரம் இல்லை. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்களை பாதிக்கப்பட்ட பகுதிகளில் வருவாய்த் துறை வழங்கும் அன்னவாரி சான்றிதழைப் பொறுத்து மத்திய காலக் கடன்களாக மாற்ற மட்டுமே இடம் உண்டு. அதற்கு இணங்க, குறுகிய காலக் கூட்டுறவு கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசுடைமை வங்கிகளும் இம்மாதிரி கடன்களை மாற்றுவதற்கு இணங்கியுள்ளன.

கோரிக்கை எண். 4 :

நெல் கொள்முதல் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலையை உயர்த்தும் உரிமை மாநில அரசுக்குக் கிடையாது. நெல்லின் கொள்முதல் விலையைக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் தமிழக அரசு தொடர்ந்து வன்மையாக வலியுறுத்தி வருகிறது.

தமிழக விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தமிழக அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1ஆம் தேதி முதற்கொண்டு மோட்டாரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 90-ம் நடுத்தர

ரகத்திற்கு ரூ. 95 என்ற விலைகளிலும் வெளிச்சந்தை வர்த்தக அடிப்படையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்க ஏற்பாடு செய்தது. வெளிச்சந்தை விலைவாசி நிலைமையை மனதிற் கொண்டு, தேவைப்படும் காலம்வரை இந்தத் திட்டம் தொடர்ந்து நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது. 1978ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி மாதம் 1ஆம் தேதி முதல் 1978ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் தேதிவரை 1,03,877 அரிசி டன்களுக்கு சமமான நெல் 400 நிலையங்களின் மூலமாக வாங்கப்பட்டது. நேரடிக் கொள்முதல் நிலையங்களில் நெல் வரத்து நின்று விட்டதால் மேற்படி நிலையங்கள் மூடப்பட்டு விட்டன.

கரும்பின் விலையைப் பொறுத்தவரை, கரும்பு (கட்டுப்பாடு) ஆணை 1966-ன்கீழ் ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய கரும்பின் விலையை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. இந்த விலை கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை அளவைப் பொறுத்தது. வேளாண்மை விளைபொருள் விலை நிர்ணயக் குழுவிற்கும் மத்திய அரசிற்கும் தமிழ்நாடு அரசு 1976—77, 1977—78ஆம் ஆண்டுகளில் ஒரு டன்னுக்கான குறைந்த பட்ச கரும்பு விலையை 8·5 சதவீத சர்க்கரை தரத்தின் அடிப்படையில் ரூ. 125 எனவும், அதற்குமேல் அதிகப்படியான 0·1 சதவிகிதம் கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 1-ம் கூடுதலாக கொடுக்கலாம் என்றும் பரிந்துரைத்தது. கடந்த 1977—78ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு சட்ட ரீதியான அடிப்படை விலையை 8·5 சதவீத கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 85 என நிர்ணயித்தது. மேலும் அதிகப்படியான 0·1 சதவீத சர்க்கரை கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 1-ம் கூடுதலாகக் கொடுக்கலாம் என்றும் நிர்ணயித்தது. டன் ஒன்றுக்கு ரூ. 85 என மத்திய அரசு விலை நிர்ணயித்தபோதிலும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மூலம் டன் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 125வரை சர்க்கரைத் தரத்தின் அடிப்படையில் விலை கிடைக்க தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

கோரிக்கை எண். 5 :

விவசாயிகளின் இக்கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு கடந்த மே மாதம் முதல் லெவி கொள்முதல் முறையையும், அதை ஒட்டிய கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட ஆணை பிறப்பித்துள்ளது.

1979 பிப்ரவரி 22]

கோரிக்கை எண். 6 :

தற்பொழுது விவசாய விசாரணைக் குழுவில் 21 உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழுவில் பல்வேறு விவசாயச் சங்கங்களைச் சார்ந்தோரும் உள்ளனர். மேலும் உறுப்பினர்களை விசாரணைக் குழுவில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

விசாரணைக் குழு மாநிலம் முழுவதும் செல்ல அரசு அனுமதி வழங்கியுள்ளது. தஞ்சை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் குழுவின் கூட்டங்களை நடத்தி அங்கேயுள்ள விவசாயிகள் தங்கள் பிரச்னைகளை குழுவின் முன்வைக்க வாய்ப்பு அளிக்குமாறு, அரசு, குழுவின் அமைப்பாளரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS